அரசுசெயலாளர்/ மாற்றுத்திறனாளிகள்நலஇயக்குநர் (மு.கூ..பொ) சென்னை
அவர்களின் செயல்முறைநடவடிக்கைகள்
முன்னிலை: திரு.லால்வேனாஇ.ஆ.ப.,

செ.மு.ந.க.எண்.6992/மஇநிர்–1/2021 நாள்:05.01.2022

பொருள்: மாற்றுத் திறனாளிகள்நலஆணையரகம், சென்னை– அரசு மறுவாழ்வு இல்லங்கள்பிரிவு– திருவள்ளூர் மாவட்டம், மேல்பாக்கம் அரசினர் ஏழைகள்பராமரிப்பு இல்லத்தில் கருணை அடிப்படையில் 26.05.2020 மு.ப முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திருமதி.பா.பிரித்தி என்பவருக்கு 26.05.2020 மு.ப முதல் பணிவரன்முறை முடித்தும் மற்றும் தகுதிகாண்பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.235, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்.26.09.2013
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.01.08.2018
3. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் செ.மு.ந.க.எண்.8224/நிர்2/2019, நாள்.13.03.2020.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்.23.01.2020

----------

ஆணை:

பார்வை 3ல் கண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் 13.03.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட காலிப் பணியிடங்களின் அடிப்படையிலும் இறந்த அரசு ஊழியர் திரு.பாஸ்கர் உதவியாளர், மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரம் என்பவரது வாரிசுதாரர் திருமதி.பா.பிரித்தி என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அடிப்படை பணியாளர் தொகுதி மற்றும் சார்நிலை பணிகளுக்கான விதிகள் பொதுவிதி 10(அ) 1ன்கீழ் தற்காலிக அடிப்படையில் திருவள்ளூர் மேல்பாக்கம், அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவருகிறார்.

2) பார்வை 2மற்றும் 4ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் தட்டச்சர் பதவி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளதனைத் தொடர்ந்து, தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் பணிநிபந்தனை சட்டம் 2016, பிரிவு 28(1) ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் 26.05.2020(மு.ப.) முதல் பணிவரன்முறை செய்தும்,

தொடர்ச்சியாக 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண் பருவத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

(அ) அலுவலக நடைமுறை நூல் (DOM)
(ஆ) இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சி

4) தனியரின் பணிப்பதிவேட்டில், தனியரின் பணிவரன்முறை செய்த விவரத்தின் பதிவுகள் மேற்கொள்ளுமாறு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஒம்) R.லால்வேனா
செயலாளர் / மாற்றுத்திறனாளிகள்நலஇயக்குநர் (மு.கூ.பொ)

//ஆணைப்படி//

05/1/2022
உதவி தனி அலுவலர்(பொ)

5/1/22

பெறுநர்
திருமதி.பா.பிரித்தி
இளநிலை உதவியாளர்,
அரசினர் ஏழைகள்பராமரிப்பு இல்லம் மேல்பாக்கம்
நகல்
1.நிர்வாக அலுவலர்(பொ)
அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லம் மேல்பாக்கம்
திருவள்ளூர்
2.அரசு செயலாளர்
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை
தலைமை செயலகம், சென்னை–9.
3.இருப்புக்கோப்பு/உதிரி .